**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

**2022 யூலை 20** **சுற்றறிக்கை** **2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கம்**

# நிலவுகின்ற அசாதாரண பேரண்டப்பொருளாதார சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கான சலுகைகள்

நிலவுகின்ற அசாதாரண பேரண்டப்பொருளாதார சூழ்நிலைகள் காரணமாக, பல்வேறு பொருளாதார துறைகளில் ஈடுபடும் வியாபாரங்களும் தனிப்பட்டவர்களும் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளும் நோக்குடன், தேவை அடிப்படையில் கடன்பெறுநர்களுக்கு பின்வரும் சலுகைகளை வழங்குமாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளையும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகளையும் (இதனகத்துப் பின்னர் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை மத்திய வங்கி கோருகின்றது.

நிதியியல் முறைமை மீதான ஏதேனும் அதிகரித்த தாக்கத்தை தடுப்பதன் மூலம் வங்கியல்லா நிதியியல் துறைகளின் உறுதிப்பாட்டை பாதுகாக்கும் அதேவேளை விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில் கடன்பெறுநரின் புதிய மீள்கொடுப்பனவு இயலுமைகளை அடிப்படையாகக்கொண்டு, பொருத்தமான மீள்கொடுப்பனவு ஒருங்கேற்பாடுகளை உருவாக்க இத்தகைய சலுகைகள் வழங்கப்படுகின்றன. அதற்கமைய, அனைத்து வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களினதும் ஒத்திசைவான நடைமுறைப்படுத்தலுக்கான முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் பரந்தளவிலான வழிகாட்டல்களை வழங்குவதற்கு இச்சுற்றறிக்கை வழங்கப்படுகின்றது. வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2021 ஒத்தோபர் 29 அன்று வழங்கப்பட்ட கடிதத்தின் நியதிகளின் பிரகாரம் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள கொவிட்-19இற்கு பின்னரான புத்துயிரளித்தல் பிரிவுகளூடாக இச்சலுகைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பரிசீலனையிற்கொள்ளலாம்.

## 1. செயலாற்றுகின்ற கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்

1.1 ஏற்கனவே கொவிட்-19 சட்டஇசைவுத்தாமதங்களுக்குட்பட்ட கடன்பெறுநர்கள் உள்ளடங்கலாக தற்போதைய பேரண்டப் பொருளாதார நிலைமைகளினால் வருமானம் அல்லது வியாபாரம் மோசமாகப் பாதிக்கப்பட்ட தனிப்பட்டவர்களின் மற்றும் வியாபாரங்களின் (இதனகத்துப்பின்னர் கடன்பெறுநர்கள் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) செயலாற்றுகின்ற கொடுகடன் வசதிகளுக்காக பொருத்தமான சலுகைகளை (அதாவது, மூலதனம் அல்லது வட்டி அல்லது மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்கும் அல்லது பகுதியளவான மூலதனம் அல்லது வட்டி என்பவற்றிற்குமான சலுகைக்காலம், கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் அல்லது ஏதேனும் வேறு சலுகைகள்) வழங்குமாறு வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கோரப்படுகின்றன. கடன்பெறுநர்களின் புதிய மீள்கொடுப்பனவு இயலளவை/சாத்தியத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு இச்சுற்றறிக்கையின் திகதியிலிருந்து ஆறு மாதகாலப்பகுதியொன்றுக்காக விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையொன்றில் சுற்றுலாத்துறை, போக்குவரத்துத்துறை மற்றும் தயாரிப்பு, பணிகள், வேளாண்மை மற்றும் கட்டுமானம் போன்ற வியாபாரத் துறைகளில் ஈடுபடும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள் உட்பட ஆனால் அவற்றுக்கு மாத்திரம் வரையறுக்கப்படாது அனைத்துப் பொருளாதாரத் துறைகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கும் இத்தகைய சலுகைகள் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

1.2 குத்தகை வசதிகளைப் பொறுத்தவரையில், கடன்பெறுநர்களின் மீள்கொடுப்பனவு இயலுமைகளுடன் பொருந்துவதற்கு, நியாயமான வட்டி வீதமொன்றுடனான நீடித்தகாலமொன்றுடன், தற்பேதைய கொடுகடன் வசதி அல்லது வசதிகளின் ஒப்பந்த தவணைப் பெறுமதியை விஞ்சாத மீள்கொடுப்பனவு திட்டத்தை கட்டமைப்பதற்கான பொறிமுறையொன்றை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உருவாக்க வேண்டும். ஏனைய கொடுகடன் வசதிகளைப் பொறுத்த வரையில், மீள்கொடுப்பனவு திட்டத்திற்கான பொருத்தமான பொறிமுறையொன்றை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உருவாக்க வேண்டும்.

1.3 சலுகையொன்றாக நயப்புக் காலத்துடன் வழங்கப்படும் கொடுகடன் வசதிகளைப் பொறுத்தவரையில், இச்சுற்றிக்கையின் கீழ் சலுகைக் காலத்திற்கான ஏற்புடைய வட்டி வீதமானது 20 சதவீதத்தினை அல்லது சலுகைக் காலத்தினைப் பரிசீலனையில்கொள்வதற்கு முன்னா் பிரயோகிக்கப்பட்ட ஒப்பந்த வட்டி வீதத்துடன் சேர்த்து 5 சதவீதத்தினை, இதில் எது குறைவானதோ அதனை விஞ்சலாகாது என்பதுடன் சலுகைக் காலத்திற்காக பரிசீலிக்கப்பட்ட தொகை மீது மாத்திரம் அறவிடப்படுதல் வேண்டும்.

**2. முன்கூட்டிய தீர்ப்பனவுகளுக்கு வசதியளித்தல்**

2.1 எவரேனும் கடன்பெறுநர் ஏற்கனவேயுள்ள ஏதேனும் கொடுகடன் வசதிகளை முழுமையாக தீர்ப்பனவு செய்வதற்கு விரும்புகின்றவிடத்து, முன்கூட்டிய தீர்ப்பனவுக் கட்டணங்கள் மற்றும் எதிர்கால வட்டி அறவீடு போன்ற ஏதேனும் மேலதிக கட்டணங்களை விதிக்காது அத்தகைய கடன்பெறுநருக்கு அவ்வாறு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

2.2 கொடுகடன் வசதிகளை முன்கூட்டிய தீர்ப்பனவு செய்வதற்கு விருப்பத்தைக் கொண்டுள்ள எவரேனும் கடன்பெறுநர் 2022.09.30 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ உரிய வங்கியல்லா நிதியியல் நிறுவனத்திடம் கோரிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.

**3. செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்கான சலுகைகள்**

3.1 அத்தகைய தனிப்பட்டவர்கள் மற்றும் வியாபாரங்களின்/செயற்றிட்டங்களின் எதிர்கால மீள்கொடுப்பனவு இயலளவை/சாத்தியத் தன்மையை பரிசீலனையில்கொண்டு, வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் விடயத்திற்கு விடயம் என்ற அடிப்படையில், மூலதனம் அல்லது வட்டி அல்லது மூலதனம் மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்கும் அல்லது பகுதியளவான மூலதனம் அல்லது வட்டி என்பவற்றிற்குமான சலுகைக்காலம், கொடுகடன் வசதிகளை மறுசீரமைத்தல் அல்லது ஏதேனும் வேறு சலுகைகள் போன்ற பொருத்தமான சலுகைகளை வழங்குவதை பரிசீலனையிற்கொள்ளலாம்.

3.2 செயற்படாக் கொடுகடன் வசதிகளுக்காக வழங்கப்படும் சலுகைக்காலம் தொடர்பான சலுகைகளுக்கான ஏற்புடைய வட்டி வீதமானது 20 சதவீதத்தினை அல்லது சலுகைக்

காலத்தினைப் பரிசீலனையில்கொள்வதற்கு முன்னர் பிரயோகிக்கப்பட்ட ஒப்பந்த வட்டி வீதத்துடன் சேர்த்து 5 சதவீதத்தினை, இதில் எது குறைவானதோ அதனை விஞ்சலாகாது.

3.3 கடன்பெறுநர்களின் உரிய கால மீள்கொடுப்பனவுகளை இயலுமைப்படுத்தும் பொருட்டு, 2020.01.01 அன்று அல்லது அதற்கு பின்னர், செயற்படாக் கடனாக வகைப்படுத்தப்பட்டுள்ள குத்தகைகச் சொத்துக்களின் கட்டாயப் பறிமுதல்செய்தலையும் மீள் உடமைப்படுத்தலையும 2022.12.31 வரை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் இடைநிறுத்தல் வேண்டும்.

3.4 வங்கியல்லா நிதியியல் நிறுவனமொன்று குத்தகைக்குச் சொத்தின் அறவீட்டு நடவடிக்கையை ஆரம்பித்துள்ள அல்லது அறிவித்தலை வழங்கியுள்ள விடயத்தில், தொடர்புடைய வங்கியல்லா நிதியியல் நிறுவனமும் கடன்பெறுநரும் படுகடன் மீள்கொடுப்பனவு இணக்கப்பாட்டை எட்டியுள்ளனர் என்ற நிபந்தனையின்பேரில், 2022.12.31 வரை அத்தகைய அறவீட்டு நடவடிக்கையானது இடைநிறுத்தப்படல் வேண்டும்.

3.5 தொடர்புடைய வங்கியல்லா நிதியியல் நிறுவனமும் கடன்பெறுநரும் படுகடன் மீள்கொடுப்பனவு இணக்கப்பாட்டை எட்டியுள்ளனர் என்ற நிபந்தனையின்பேரில், , வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், 2022.12.31 வரை அக்கடன்களையும் முற்பணங்களையும் அறவிடுவதற்கான புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதை பிற்போடுதல் வேண்டும். அறவீட்டு நடவடிக்கைகளுக்கான தீர்மானங்கள் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட சந்தர்ப்பத்தில், குத்தகைக்குச் சொத்தின் பறிமுதலும் மீள் உடமைப்படுத்தலும் 2022.12.31 வரை இடைநிறுத்தப்படல் வேண்டும்.

3.6 எனினும், வேண்டுமென்றே தவணைதவறுபவர்கள், நிதியங்களை திசைதிருப்புவதன் காரணமான தவணைதவறுதல்கள், வியாபாரங்களில் தவறான முகாமைத்துவம் அத்துடன்/அல்லது மோசடிகள் மற்றும் நீடித்துழைக்காத செயற்றிட்டங்கள் என்பவற்றின் காரணமாக ஏற்படும் தவணைதவறுதல்கள் போன்றன ஏதேனும் மேற்குறிப்பிட்ட சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்படலாகாது.

3.7 கடன்பெறுநரைத் மிதமிஞ்சி தொடர்பு கொள்ளாமல், அவரின் இருப்பிடத்திற்குச் சமூகமளிக்காமல், அல்லது அவரைக் கட்டாயப்படுத்தாமல் வழமையான சேகரிப்பு நடைமுறையை/அறவீட்டை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் தொடர்ச்சியாக முன்னெடுக்கலாம்.

**4. கொடுகடன் தகவல் பணியகத்திற்கு அறிக்கையிடுதல்**

4.1 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கடன்பெறுநர்களிடமிருந்தான புதிய கடன் விண்ணப்பங்களை கொடுகடன் தகவல் பணியகத்தின் பாதகமான பதிவேடுகளை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு நிராகரிக்கக்கூடாது.

4.2 தேவைப்படுமிடத்து, பாதிக்கப்பட்ட கடன்பெறுநர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை அறிக்கையிடுவதற்கு கொடுகடன் தகவல் பணியகத்துடனான ஆலோசனையுடன் அறிக்கையிடும் முறைமையொன்றை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் உருவாக்குதல் வேண்டும்.

**5. கணக்கீட்டை கையாளுதல்**

**நாணயச் சபை**
**இலங்கை மத்திய வங்கி**

**2022 யூலை 20 சுற்றறிக்கை 2022ஆம் ஆண்டின் 01ஆம் இலக்கம்**

5.1 சலுகைகளுக்காக பரிசீலனையிற்கொள்ளப்படும் வசதிகளுக்கான கணக்கீடு செய்தல் தொடர்பில் இலங்கை கணக்கீட்டு நியமங்களை வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் கடைபிடித்தல் வேண்டும்.

5.2 இது தொடர்பில் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேலதிக வழிகாட்டல்கள்/தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமிடத்து இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்திடமிருந்தும் கணக்காய்வாளர்களிடமிருந்தும் ஆலோசனை பெறலாம்.

**6. சலுகைகளின் வெளிப்படைத்தன்மை**

6.1 மேற்குறிப்பிட்ட சலுகைகைகளுக்காக தகைமையுடைய கடன்பெறுநர்கள், 2022 ஓகத்து 15 அன்று அல்லது அதற்கு முன்னர் எழுத்திலான அல்லது இலத்திரனியல் வடிவில் கோர முடியும்.

6.2 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கோரிக்கை கிடைக்கப்பெற்ற ஒரு மாதக்காலப்பகுதியினுள் கடன்பெறுநர்களினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா அல்லது நிராகரிப்பதா என்பது தொடர்பிலான தீர்மானத்தை மேற்கொண்டு அத்தீர்மானத்தை உரிய முறையில் கடன்பெறுநருக்கு அறிவித்தல் வேண்டும்.

6.3 வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள், கொடுகடன் வசதிகளையும் ஏற்புடைய வட்டி வீதத்தையும் பிற்போடும் கட்டமைப்பு அல்லது மறுசீரமைத்தல் தொடர்பில் ஒப்புதலுக்கு முன்னர் கடன்பெறுநருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் என்பதுடன் கடன்பெறுநரின் சம்மதம் எழுத்தில் அல்லது இலத்திரனியல் வடிவில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

**7. அறிக்கையிடும் தேவைப்பாடு**

வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் அவற்றின் கடன்பெறுநர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட சலுகைகளின் விபரங்களையும் சலுகைத் தொடர்பிலான கோரிக்கை நிராகரிப்புக்களையும் 2022 ஓகத்து 31ஆம் நாளிலிருந்து ஆரம்பித்து ஒவ்வொரு மாதத்தின் இறுதியிலுள்ளவாறான 15 வேலை நாட்களுக்குள் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். அறிக்கையிடுகின்ற படிவம் காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

**முனைவர் பி. நந்தலால் வீரசிங்க**
நாணயச் சபையின் தலைவரும்
இலங்கை மத்திய வங்கியின் ஆளுநரும்